**உள்ளூராட்சி சுற்றறிக்கை – 01/2024**

சகல உள்ளூராட்சி மன்றங்களின் முதல்வர்கள் / தலைவர்கள்.
மாநகர ஆணையாளர்கள் / நகர, பிரதேச சபை செயலாளர்கள்.
சகல பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள்.

## உள்ளூராட்சி மன்றங்களின் தரவுகளை இலத்திரனியல் தரவுத்தளத்தில் பேணுதல்.

1. வட மாகாணத்தின் 5 மாவட்டங்களிலுமுள்ள 34 உள்ளூராட்சி மன்றங்களும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக இலத்திரனியல் தரவுத்தளத்தினை 01.01.2024 ஆம் திகதி தொடக்கம் உருவாக்குதலும் அதனை நாளதுவரை இற்றைப்படுத்துதல் வேண்டும்.

   i. பொதுமக்கள் சேவைகள் பட்டையம் தொடர்பான விபரங்கள் - Details of Citizen Charter

   ii. பொதுமக்கள் குறைகேள் முறைமை பற்றிய விபரங்கள் – Details of Public grievance mechanism.

   iii. திண்மக்கழிவு முகாமைத்துவ தகவல்கள் - Data for Solid Waste management.

   iv. அபிவிருத்தி வேலைத்திட்ட விபரம் - Details of Development Works.

   v. வருமான சேகரிப்பு விபரங்கள் – Details of Revenue Collection.

   vi. மாதாந்த வருமானம் மற்றும் செலவின சுருக்கம்- Summary of Monthly Revenue and Expenditure.

   vii. அட்டவணைப்படுத்தப்படாத பதவியணியினர் விபரம் - Details of Unscheduled Cadre.

   viii. இணைந்த சேவை அலுவலர்களின் வேலை நிறைவேற்று அறிக்கை – Work done reports for Combined Service Staff

2. மேற்படி இலத்திரனியல் தரவுத்தளத்தினை நாளதுவரை இற்றைப்படுத்துவதற்கு Google Sheet இனை பயன்படுத்துதல் வேண்டும்.

3. இந்த Google Sheet இன் உரிமையாளராக உள்ளூராட்சி மன்றங்கள் செயற்படுதல் வேண்டுமென்பதுடன் தங்களுக்குரிய தரவுத் தளத்தின் தகவல்களை பாதுகாக்க ( Data Security) வேண்டிய பொறுப்பும் உள்ளூராட்சி மன்றங்களுக்குரியதாகும்.

4. தங்கள் மாவட்டத்திற்கான உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கும். உள்ளூராட்சி திணைக்களத்திற்கும் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றமும் தங்களின் இலத்திரனியல் தரவுத்தள Google Sheet இணைப்பினை ( Link ) பார்ப்பதற்காக (Viewer) பகிர்தல் (Share) வேண்டும்.

5. மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் குறித்த தரவுகள் தொகுக்கப்படல் வேண்டும். எனவே பொதுமைப்படுத்தலுக்காக உள்ளூராட்சி திணைக்களம் தயாரித்த Google Sheet மாதிரி படிவத்தினை பயன்படுத்துவது அவசியமாகும்,

6. காலத்திற்கு காலம் உள்ளூராட்சி திணைக்களத்தினால் பிற விடயங்கள் தொடர்பான விபரங்களை விரிவுபடுத்துமாறு கோரப்படும் போது, உள்ளூராட்சி மன்றங்களின் ஒத்துழைப்பு அவசியம்.

7. ஒவ்வொரு விடயம் சார்ந்த Google Sheet னையும் நாளதுவரை இற்றைப்படுத்துவதற்கு விடயத்துக்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் எல்லா உள்ளூராட்சி மன்றங்களிலும், பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகங்களிலும் வட மாகாண உள்ளூராட்சி திணைக்களத்திலும் நியமிக்கப்படுதல் வேண்டும்.

8. அவ்வாறு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் விபரங்கள் ( பெயர், பதவி, கையடக்க தொலைபேசி இலக்கம் ), குறித்த Google Sheet இன் முதலாவது நிரையில் பதிவிடப்படல் வேண்டும்.

9. தரவுகளை இற்றைப்படுத்துவதற்கான பணி குறித்த உத்தியோகத்தருக்கு எழுத்து மூலம் வழங்கப்படல் வேண்டும்.

10. ஒவ்வொரு Google Sheet இற்கும் பொறுப்பாக நியமிக்கப்பட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக மற்றும் வட மாகாண உள்ளூராட்சி திணைக்கள உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி மன்றங்களால் தரவுகள் நாளதுவரை இற்றைப்படுத்தப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

11. இந்த Google Sheet இல் தரவுகளை பதிவிடும் செயற்பாடு மாகாணத்திற்கான தரவுகளை இலகுவில் பெற்றுக்கொள்வதற்கான ஒரு செயற்பாடு மட்டுமின்றி உள்ளூராட்சி மன்ற ரீதியாக பணிகளை காலக்கிரமத்தில் நிறைவேற்றுவததை உறுதிப்படுத்தும் செயற்பாடாகவும் உள்ளது.

12. ஏதாவது உள்ளூராட்சி மன்றத்தின் தரவுகள் இற்றைப்படுத்தப்படாமல் இருக்குமாயின் மாவட்டத்திற்கான மற்றும் மாகாணத்திற்குரிய தரவினை முழுமையாக தொகுக்க முடியாத சூழ்நிலை ஏற்படும். எனவே இக்கடமையின் பொருட்டு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் உரிய காலத்தில் பணிகளை நிறைவு செய்தல் வேண்டும்.

13. உள்ளூராட்சி மன்றத்தின் ஆணையாளர்கள் / செயலாளர்கள் தங்கள் அதிகார சபைக்குரிய இலத்திரனியல் தரவுத் தளத்தினை முறைப்படி கண்காணித்தல் வேண்டும்.

14. இத்தரவுத்தளத்தில் விபரங்கள் முறையாக பதிவேற்றப்படுகின்றமை தொடர்பாக அந்தந்த மாவட்டத்திற்கு பொறுப்பான உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

செ. பிரணவநாதன்.
உள்ளூராட்சி ஆணையாளர்,
வட மாகாணம்.
01.01.2024